# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COUR-T OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.**

CC.No.7-2015 **L.W.11** **ADDL.1** **P.W.9**

| | | | |
|---|---|---|---|
| Name | எம்.தனசேகரன்<br>உதவி ஆய்வாளர், பெண்ணாடம் | Caste | |
| Father/Husband Name | மின்னயடியான் | Calling | |
| Village | பெண்ணாடம் | Religion | |
| Taluk | திட்டக்குடி | Age | 56 |
| District | கடலூர் | Time | 5.30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 12.09.2024 நாளாகிய இன்று திரு.அன்பு பி.ஏ., பி.எல்., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரிகள் இருவரும் ஆஜரில்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். BNSS 355 ன் கீழ மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது,**

**அரசு தரப்பின் 348 BNSS மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்படுகிறார்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

**1,**நான் தற்போது பெண்ணாடம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் ஆசைதம்பி அவர்களின் கையொப்பத்தை நான் அவருடன் பணிபுரிந்த காலத்திலும் நிலைய கோப்பு ஆவணங்களை பார்வையிட்டு உதவி ஆய்வாளர் ஆசைதம்பி அவர்கள் உடல் நிலை சரியில்லாமல் சமூக நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாத இயலாத காரணத்தால் நான் ஆவணங்களின் அடிப்படையில் நீதி நலன் கருதி சாட்சியம் அளிக்கின்றேன். ஆசைதம்பியின் மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. கடந்த 01.06.2014 தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பராயன் என்பவர் நிலைய குற்ற எ ண் 97–2014. இ,தச, ச,பி,294(பி).323. 324. 506(2) இதசவின் கீழ் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து வழக்கின் கோப்பினை உதவி ஆய்வாா் திரு,ஆசைத்தம்பியின் பார்வைக்கு வைத்ததை அன்றைய தினமே சம்பவம் நடந்தஇடமான அ,சா,1 ன் வீட்டிற்கு அருகே சென்று சாட்சிகள் சீமான். சுரேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும்

பார்வை மகசர் தயாரித்து அந்த பார்வை மகசரில் சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் கேட்டு பெற்றுள்ளார். அந்த சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மாதிரி வரைபடம் **அசாஆ 9** மற்றும் பார்வை மகசர் **அசாஆ 10** ஆகும்.

3. பிறகு, வழக்கில் பாதிக்கப்பட்ட புகார்தாரர் உட்படட சாட்சிகள் 1 முதல் 4 வரையுள்ளவர்கள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணைகளிலும் அவருடைய தனிப்பட்ட விசாரணைகளிலும் சம்பவத்தை உறுதி செய்து எதிரியை தேடிய போது எதிரிகள் இருவரும் மேன்மை மிகு கடலூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலல தக்க முன்ஜாமீனில் சென்றுள்ள விபரத்தை அறிந்து காயம் பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த விருத்தாசலம் மருத்துவர் திரு,ராஜ்குமார் என்பவரை விசாரித்து நான்கு கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடுகளை பெற்ற அவர் வழங்கிய விபத்து பதிவேடுகளில் இரு நபர்களுக்கு கொடுங்காயம் என்று சான்று அளித்ததால் வழக்கின் சட்டப்பிரிவை ச,பி,294(பி).323. 324. 506(2) இதசவிலிருந்து ச,பி,294(பி).325. 324. 506(2) இதச ஆக பிரிவு மாற்று அறிக்கை தயார்செய்து அந்த பிரிவு மாற்று அறிக்கை **அசா.ஆ,11** ஆகும். இத்துடன் அவரது விசாணையை முடித்து சமூக நீதிமன்றத்தில் அந்த பிரிவு மாற்று அறிக்கையுடன் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 4,00 கிலோமீட்டர் இருக்கும், சம்பவம் 01-06-2014 அன்றுதான் நடைபெற்றது என்றால்? சரிதான், வழக்கு சம்பவ இடம் தங்களுக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க சாட்சிகள் சிட்டி கணபதி. செல்வராஜ் ஆகியோா் ஆவணங்கள் எதையும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான், வழக்கின் இறுதியறிக்கை 07-08-2014 அன்று தாக்கல்செய்யப்பட்டது என்றால்? சரிதான், வழக்கில் தடயப்பொருட்களாக ஆயுதங்களை கைப்பற்றி ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான், **அ,சா,ஆ,7** புகாா் வாக்குமூலம் மருத்துவமனையில் எப்போது பெறப்பட்டது என்றால்? 14,30 மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்து பெறப்பட்ட புகாரின் படி காவல் நிலையத்திற்.கு வந்துமுதல் தகவல் அறிக்கை பதியப்பட்டதாக **அ,சா,ஆ,7** புகாா்வாக்குமூலத்தில் சிறப்பு உதவி ஆய்வாளா்திரு,சுப்பிராயன் குறிப்பிட்டுள்ளாா், சம்பவ இடத்தில் உள்ள தனியா் சாட்சிகளை உதவி ஆய்வாளா் திரு,ஆசைதம்பி வசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, பாா்வை மகசா் ஆவணம் **அ,சா,ஆ,10** ல் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பில் உள்ளவா்களை சாட்சியாக வசாரிக்கவில்லை என்றால் சரியல்ல,

2, சாட்சி ஷீலா. ராஜபிரியா. ஜெயரலட்சமி ஆகியோா்களின் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல, ரோஜேந்திரன். ஜெயலட்சுமி. ராஜபிரியா. ஷீலா ஆகியோா ஒரே குடும்பத்தைசோ்ந்தவாகள் என்றால் சரிதான், **அ,சா,ஆ,1** புகாரில் சம்பவ இடம் யாருக்கு சொந்தமானது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான், எதிரிகளுக்கு சாதகமாக சமூகம் திட்டக்குடி சாா்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு தீா்பாகி விட்டதால் காழ்புணா்ச்சி அடிப்படையில் புகாா் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, மற்றசாட்சிகள் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலும் பெறப்பட்டது என்றால் சரியல்ல, மருத்துவரை புலன் விசாணை அதிகாரி ஆசைதம்பி 07-08-2014 அன்தான் விசாரித்து வாக்குமூலம் பதிவிசெய்துள்ளாா், 07-08-2014



அன்று சாட்சிகள் ராஜேந்திரன் முதல் சீமான் வரை உள்ளவா்கள் மீது மற்றொரு முதல் தகவல் அறிக்கை பதியப்படட்து

என்றால் அதை பொருத்து வழக்கு கோப்பில் குறிப்பு இல்லை எதிரிகளுக்கும் இந்த வழக்கிறிகும சம்மந்தமில்லை என்றால் சரியல்ல, அ,சா,1 மற்றும் அ,சா,2 ஆகியோர் மீது இதே சமூகம் நீதிமன்றத்தில் குற்ற வழக்.க நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல, எதிரிக்கும இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல,

TYPED TO MYDICTATION OPENCOURT
INPRESENCE OF ACCUSED READOVER
TO THE DEPONENT AND ADMITTED BY
HIM/HER TO BE CORRECT

JUDICIAL MAGISTRATE,
THITTAGUDI